**IN THE SPECIAL COURT OF FOREST OFFENCE CASES JUDGE,**

**KANNIYAKUMARI DISTRICT AT NAGERCOIL**

**C.C. No. 4/2025**

**Deposition of P.W. 1**

| | | |
|---|---|---|
| **Name** | : | **Thiru. Sankara Pandi** |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |
| **Dated** | : | **23.07.2025** |

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba

**In accordance of the provision of Act 1873.**

**சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :**

நான் தற்போது திருநெல்வேலி வனக்கோட்டம், சேரன்மகாதேவி வனச்சரகம், முக்கூடல் பிரிவு வனவராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின்போது கன்னியாகுமரி மாவட்ட பூதப்பாண்டி வனச்சரக பணகுடி பிரிவு ரோஸ்மியாபுரம் பீட் முழுப்பொறுப்பாகவும், சிவகாமிபுரம் பீட் கூடுதல் பொறுப்பாகவும் வனக்காப்பாளராக பணியாற்றிவந்தேன். ஆஜர்எதிரிகளை எனக்கு தெரியும். 29.12.2022 அன்று கன்னியாகுமரி மாவட்ட வனஅலுவலருக்கு கிடைத்த தகவலின்படி உதவி வனபாதுகாவலர் தலைமையில் சுமார் 4.30 மணியளவில் பூதப்பாண்டி வனச்சரகம், பணகுடி பிரிவு சிவகாமிபுரம் ஊரின் அருகில் உப்பு ஓடை பகுதியில் பூதப்பாண்டி வனச்சரக அலுவலர், பணகுடி பிரிவு வனவர், வனக்காப்பாளராகிய நான்

மற்றும் வேட்டைத்தடுப்பு காவலர்கள் ரோந்து பணி மேற்கொண்டபோது உப்பு ஓடை பகுதியில் உள்ள குட்டிக்குளம் அருகில் மூன்று பேர் நின்றுகொண்டிருந்தனர். எங்களை பார்த்ததும், அவர்கள் ஓட முயற்சித்தனர். அவர்களை துரத்திசென்றபோது இரண்டு பேரை பிடித்தோம். ஒருவர் தப்பிவிட்டார். இரண்டு பேரையும் விசாரித்தபோது அவர்கள் சிவகாமிபுரம் பகுதியை சேர்ந்த ஆதிகேவசம் மற்றும் சுனில் என்பது தெரியவந்தது. அவர்களை விசாரித்ததில் தப்பி ஓடிய நபர் இசைக்குமார் என்பது தெரியவந்தது. பின்பு விசாரணையில் அவர்கள் மூன்று பேரும் சேர்ந்து 29.12.2022 ம் தேதி மாலை 3.30 மணியளவில் உப்பு ஓடை பகுதியில் பனைமரம் ஏற சென்றதாகவும், உடும்பு ஒன்று சென்றதைக்கண்டு இசைக்குமார் அதைப்பிடித்துள்ளதாகவும், பின்பு மூவரும் சேர்ந்து அந்த உடும்பினை கத்தியால் வெட்டியது தெரியவந்தது. பின்பு அவர்களிடமிருந்து உடும்பு கறி, தோல் மற்றும் தலை ஆகியவற்றை கைப்பற்றினோம். அவர்கள் சமைப்பதற்காக கையில் வைத்திருந்த அலுமினிய சட்டி 1, சில்வர் கரண்டி மற்றும் கத்தி ஆகியவற்றை கைப்பற்றினோம். பின்னர் சம்பவ இடத்தில்வைத்து ஸ்தல மகசர் தயார் செய்தேன். பிடிபட்ட ஆதிகேவசன் மற்றும் சுனிலிடம் சம்பவ இடத்தில் வாக்குமூலம் பெற்று எச்.நமூனா தயார் செய்தேன். பின்னர் அவர்களை வனச்சரக அலுவலகம் அழைத்து சென்று, பூதப்பாண்டி வனச்சரக வன உயிரின குற்ற எண். 20/2022 , நாள். 29.12.2022 பதிவு செய்து அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தோம். மேலும் நான் இவ்வழக்கில் இளவர் பிழையாளியான ஆதிகேசவன் என்பவரது குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தினை பதிவு செய்தேன். இளவர் பிழையாளி இளவர் என்பதால் இவ்வழக்கில் குற்றவாளியாக சேர்க்கப்படவில்லை. **(2ம் எதிரி சுனில் அளித்த ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ. 1 ஆகவும், ஸ்தல மகசர் அ.சா.ஆ. 2 ஆகவும், எச்.நமூனா எண். 039181 அ.சா.ஆ. 3 ஆகவும், வனக்குற்ற அறிக்கை அ.சா.ஆ– 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

பிடிபொருட்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்து R.P. எண் பெறப்பட்டது.